உ
சிவமயம்



இஃது

யாழ்ப்பாணம் வடமராட்சி

துன்னையம்பதி வாசரும்,

உயர்சைவ வேளாண்குடியினரும்

காலஞ் சென்ற

திரு. நாராணபிள்ளை வடிவேலு

அவர்களின் அருந்தவ மனைவியுமான

# திருமதி வள்ளியம்மை

அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்.

ஆக்கம்:

"துன்னையூர் செல்வி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி
# வள்ளியம்மை வடிவேலு

மண்ணகம்: 14 – 02 – 1929

விண்ணகம்: 22 – 01 – 1992

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு பிரசோற்பத்தி தைப்புதன் ஈர்நான்கில்
ஈண்டபர பட்சத்தின் திருதியை — நன்னாளிலே
கண்ணியமாய் வாழ்ந்த வெங்கள் வள்ளியம்மை
மண்ணுலகை நீத்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
    தாரமார் புத்திரரார் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்கனே போமோ றேதோ
    மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
    திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் செந்தீ
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
    வென்றெழுவார் இரு விசும்பில் இருக்கலாமே.

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
    எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந்(து) உதவுவார் ஒருவர் இல்லை
    சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பார்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
    திருவானைக் காஉடைய செல்வா என்றன்
அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
    அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்வேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

காமனைக் காலன் தக்கன் மிக்கெச்சன்
படர்க்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் தில்லை வட்டங் கொண்டாண்ட
செல்வச் சிற்றம்பலக் கூத்தா
பூமலரடிக் கீழ் புராணை பூதங்கள்
பொறுப்பரென் புன்சொல்லின் பொருளே.

## திருப்பல்லாண்டு

சேலுங்கயலும் திளைக்கும் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கும்
என்றுபுண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனுமறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி மறுசமயங்கள் மாளப்
போதகஞ் செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றி யான்செய்
பாதகமனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

மாதாவச மாயுற் றுழல்வாரும்
மாதவ மெண்ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநகர மீதிற் றிகழ்வாரும்
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோயில் கதிர்காமப் பெருமாளே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினுள் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னருமற்று முள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

✲✲

# திருமதி வள்ளியம்மை வடிவேலு அவர்களது வாழ்க்கை வரலாறு

இயற்கை வளங்களும் பழம்பெரும் ஆலயங்களும் செறிந்த ஊர் துன்னலையம்பதி. இவ்வூரில் வாழையடி வாழையாக வாழ்ந்துவரும் பெருமக்களுள் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையும் அவரது அன்புமனைவி சௌந்தரிப்பிள்ளையும் நினைவு கூரத்தக்கவர்கள். அவர்கள் பெற்றெடுத்த ஆறு பிள்ளைகளுள் கடைசிப்பிள்ளையே இந்த வடிவேலு வள்ளியம்மை. இவருக்கு வாழ்க்கைத் துணைவராக வந்து வாய்த்தவர் நாரரணபிள்ளை மீனாட்சி தம்பதியின் மகன் வடிவேலு. இவர்களது இல்லறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறமாக அமைந்த காலை தோன்றிய பிள்ளைகள் எழுவர்; சாந்தமலர், வசந்தமலர், இரத்தினேஸ்வரி, இராசமலர், சூரியகுமாரீ, நந்தகுமாரி ஆகியோர் பெண்கள், சூரியகுமார், வசீகரன் இருவரும் ஆண்கள். கைப்பிடித்த கணவன், ஒருமகள் மட்டும் திருமணம் செய்து பிரிந்தநிலையில் பிள்ளைகள் எழுவரையும் விட்டுக் கண்மூடினார்.

கணவனை இழந்த நிலையிலும் மனம்தளராது தனது பிள்ளைகளை வாழ்விக்க அயராது உழைத்தார். தெய்வம் கைகொடுக்கும் என்ற நம்பிக்கை அவரது உள்ளத்தில் வேரூன்றிக் கிடந்தது. இறைவனருளால் பெண்மக்கள் மணமுடித்து நல்வாழ்வு வாழவைத்தார். கடைக்குட்டி தாயின் நலிவைத் தவிர்க்கும் நோக்குடன் கடல்கடந்த நாட்டுக்குச் சென்று சிறப்பாகச் சம்பாதிக்க வைத்த பெருமை திருமதி வள்ளியம்மைக்குரியது. மூத்தமகனது மணவாழ்க்கையையும் கண்டு இன்னும் எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்துகொண்டிருந்த அம்மையாரின் வாழ்வில் இறைவன் இடையில் புகுந்து விளையாடித் தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

நோயினால் அவதியுற்ற போதெல்லாம் தன் பிள்ளைகள் பற்றியே நினைத்தபடி மண்ணுலகை நீத்த திருமதி வள்ளியம்மையவர்களது ஆன்மசாந்திக்காக அனைவரும் தொழுவோமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## வழிபடு கடவுளர் துதி

### வல்லியானந்தப் பிள்ளையார்

(சிந்துபைரவி)

ஆனைமுகத்தழகும் அகண்டநல்மார்பழகும் பானைவயிற்றழகும்
பருத்தநல்தூழலகும்
வேளையறிந்தடியார் வினைதீர்க்க வல்லியானந்த சூழலில்
மோனைப்பொருளே மூத்தகணபதியே உனைவேண்டி வந்த
நாயிற்கடையனைக் காத்தருள்வாய் யுன் துணைநலம்பெறவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிமகளான வள்ளியைத் தன்வசமாக வெண்ணும்
தம்பிக்கு வள்ளியைத் தாரமாய்ச் செய்திட்ட தத்துவனே
தும்பிக்கை காட்டி வல்லியானந்தத்தில் வீற்றிருந்து
தம்பிக்குதவிய தயாநிதியே யெந்தனையும் ஆதரியே.

## வீட்டம்மன்

கண்ணீரை நீரேசிந்தக் கசிந்துருகாத நாட்கள்
மண்ணிலே உளதோ இல்லை மனநிறைவளிக்குந் தாயே
பண்ணிய வினையின்பேறாய்ப் பறந்துவந் திட்டேனம்மா
நண்ணரு மடிசார்பேறு நல்குதி வீட்டம்மனே.

## வல்லிபுர ஆழ்வார்

பூபாரந் தீர்த்துலகப் புன்மைகளைப் போக்கிடவே
மாபா ரதமியற்று மாயவனே — கோபாலர்
நெஞ்சுறையு நீர்மையனே நீலமணி வண்ணநினைத்
திஞ்சமடைந் தேனென்னைத் தாங்கு.

## அத்திப்பரவு காளியம்மன்

நீறது நெற்றிக்காக்கி நெஞ்சிது பக்திக்காக்கி
வீறுடைக் காளியம்மா விரைமலரிட்டுப் போற்றிப்
பேறனி என்றுகேட்டுப் பராவிய தறிவாயன்றோ
ஆறுதலுன்தன் பாதம் அதனையே தருவாயம்மா.

## சோழியவத்தை நரசிம்மர்

காளிக்குதவிடக் காரணமாய் வந்திக் காசினியில்
சோழியவத்தை தன்னிலே நரசிம்மராய்க் காட்சிதந்த
தாளைப்பணிந்திடு மடியார்க்கு நல்வரமீயு முந்தன்
காலைப்பிடித்தேன் வடுகா எனக்கருள் தந்திடுவாய்.

## செல்வச்சன்னிதி முருகன் துதி

சன்னிதியிலே அன்னதானத்தை விரும்பும் வேலா
பன்னெடுங் காலமாகப் பக்தியாய் துதித்தசீலன்
விண்ணவர் துயரந்தீர்த்த வேலவா அடியேனுந்தன்
வண்ண மயிலேறி இருந்தவரமது தந்திடாயே.

## வற்றாப்பளை அம்மன் துதி

பொங்கல்படைத்திட்டோம் பூசனைகள் செய்திட்டோம்
முல்லைத் திருக்கோயில் சுற்றிவந்தோம் — அங்குனது
பாதமதை வேண்டித் தீக்குளித்தேம் அம்மனே
பாதமது தந்தருள் கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## பெண்மக்கள் புலம்பல்

**(சாந்தமலர், வசந்தமலர், இராசமலர், சூரியகுமாரி)**

பிஞ்சு வயதினிலே அப்பாவை நாமிழந்து தவிக்கையிலே
விஞ்சு துயரமெல்லாம் விலக்கி எமைவளர்த்த தெய்வமே
குஞ்சுக் குழந்தைகளாய் நாமிருக்க நீசெய்த கடன்மறவோம்
நெஞ்சு தடுமாறி நெடுந்தூரம் தேடுகிறோம் வாராயோ.

**(இரத்தினேஸ்வரி மாத்தளை, நந்தகுமாரி கொழும்பு)**

கண்ணில் விழிக்கவில்லை கடமைநாம் செய்யவில்லை
எண்ணி உனைக்காண ஏற்றமாய் ஓர்கடிதம்
கண்ணீரில் நீஎழுதி கட்டிவிட்ட ஓர்கடிதம்
எண்ணத்தை நாமெழுதி ஏற்றிவிட்டோம்
எண்ணற்ற தொலைதூரத் திருந்து தேம்பி (மறுகடிதம்
கண்ணுறாது வதங்கினமே துயரத் தாலே
கண்ணுக்குள் குளமாகக் கசிய வெம்பிக்
கலங்குகிறோம் ஆறவழி காணோம் அம்மா.

## ஆண்மக்கள் புலம்பல்

**சூரியகுமார்** (புல்மோட்டை இல்மனைட் கூட்டுத்தாபனம்)
**வசீகரன்** (பிரான்ஸ்)

சிறந்தபல குணநலன்கள் கொண்ட அம்மா
சேர்ந்தநோய் வருத்திடவே வதங்கி யின்று
இறந்துவிட்டீர் எனச்சேதி கிடைத்த போதே
இருகண்ணும் ஆறாகத் துடித்து நின்றோம்
பறந்துவரக் கிடைக்கவில்லை பதறி இங்கே
புலம்புநிலை யானதுவே அம்மா நெஞ்சம்
மறந்துவிட மாட்டாத சோகம் பெற்றே
மாய்கின்றோம் என்சொல்லி ஆறு வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்மருமக்கள் புலம்பல்

(சுப்பிரமணியம், கணேசமூர்த்தி, சாம்பசிவம், கணேசலிங்கம் சண்முகநாதன், ரவீந்திரவிநாயகம்)

பாயுதே கண்ணீராறாய்ப் பதைக்குதே தேசம்நொந்து
சோருதே மாமியுந்தன் தோற்றத்தை நினைக்கும்போது
நேயமாய் நீவளர்த்த நிலையான பேரருன்னைக்
காணாமல் கலங்குகின்றார் கனவினில் வந்திடாயோ.

## மருமகள் தவநாயகி புலம்பல்

அருகிலிருந்து உங்கள் பரிதவிப்பைக் கண்டேன்மாமி
அருகிலிருந்து உங்கள் நிராகாரத்தை வார்த்தேன்மாமி
பாவிஎன்கையால் பால்வார்த்து கருமங்கள் செய்தேன்மாமி
காலனவன் வென்றுவிட்டானே கதிகலங்கி மாய்கிறேனே.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

(சசி, வசந்தநாயகி கணேஸ்வரி, வளர்மதி, வாசுதேவன் வாசுகி, பார்த்திபன், ரஞ்சனா, நித்தியகலா, அஞ்சலிக்கா மேனகா நிதசன், பவா, விஜயகாந்தன், சிறிஸ்கந்தராஜா, லக்ஷாயினி, தட்சாயினி, சாதனா, மயூரன் நிரஞ்சன், ரேகா, ஜெயந்தன்)

அடைமழைபோல் அன்பதனைச் சொரிந்து வேண்டும்
அத்தனையும் தந்தணைத்து கொஞ்சிக் கொஞ்சி
மடியிருத்தி நெஞ்சிருத்தி வளர்த்த பாட்டி
மடைதிறந்த நீரதுபோல் மகிழ்ந்த எம்மைத்
துடிதுடித்தே அலறவென விட்டே ஓடிச்
சென்ற தெங்கே கொண்டதுயர் திருமாமோ
அடிவயிறு அனலெரிய அழுது மாய்ந்து
அலறிட வைத்திட்டீர் ஐயோ ஐயோ.

## சகோதரர் புலம்பல்

(திருஞானசம்மந்தபிள்ளை, புவனேஸ்வரி)

கண்ணாளன் தந்திட்ட கடைக்குஞ்சு சோதரியே
காலமெலாம் நாங்கள் உன்தோற்றம் கண்டு
மண்ணதனில் மகிழ்ந்திருந்த வள்ளியம்மா நீ
கண்ணதனை மூடிவிட்டீர் கலங்குகிறோம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனிமார் புலம்பல்

(சிவபாக்கியம், இலட்சுமியம்மா, சிவக்கொழுந்து, சரஸ்வதி)

உத்தமியே குடிவிளங்கு புகழின் வாழ்வை
உடையவளே உறுதுயரம் தீர்க்க வல்லாய்
நித்தம் எங்களுடன் பழகி நேசம்தந்து
நின்றிட்ட நீயின்று மறைந்து விட்டாய்
மைத்துனியே மனமதிர்ந்து கலங்கு கின்றோம்
மண்ணிலினி மாற்றரிய சோகம் கண்டோம்
எத்திசையிற் சென்றிட்டாய் என்செய் வோமே
இறைவனுக்குங் கண்ணில்லைத் தானோ ஐயோ.

## உறவினர் புலம்பல்

எத்தனைதான் நட்பிருந்த போதும் நீதி
என்றறிந்தால் அதனைநிலை நாட்டி நிற்பாய்
சித்தமிசைக் கரவறியாய் பொய்யு மில்லை
தெளிந்தமன உறுதியுடன் வாழ்ந்த அன்பை
இடைநிறுத்த முடியாது கண்ணீ ராறாய்
இங்கொழுக நின்றுருகி மாய்கிறோம் நாம்
கொடுயமனைக் கொல்லவொரு யமனுண் டானாற்
கொன்றழிக்க மாட்டானோ வெதும்பி னோமே.

## அயலவர் புலம்பல்

எந்தக்கணத்திலும் எம்முடை வீடுகளில் நடக்கும்
எந்தச்செயலிலும் பங்குகொண் டாவன செய்திடுவீர்
இந்தவிதத்தினில் எண்ணாத நேரத் திறந்துபடச்
சிந்தைதுடித்தனம் துக்கம் மிகுந்து தவித்தோமே.

## தேற்றம்

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் — பட்டதுபட்
டென்னேரமுஞ் சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்புடையீர்!

எமது அன்புத் தெய்வத்தின் ஈமச் சடங்கிலும்
அந்தியேட்டி வைபவத்திலும் கலந்துகொண்ட
உறவினர்கள், நண்பர்கள் அனுதாபச்
செய்திகள், இரங்கற்செய்திகள் அனுப்
பிய அன்பர்கள், மற்றும் வேண்
டிய உதவிகள் செய்த அனை
வருக்கும் எங்கள் மன
முவந்த நன்றி
உரித்தாகுக.

ஆத்தியடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
21-02-1992.

இப்படிக்கு
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

நவஸ்ரீ
அச்சகம்,
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org